மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 367, திரு. வெ. தமிழரசு; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

367-

நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் சீரான மின்சாரம் வழங்குதல்

**17496*-திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நாமக்கல் வட்டம், செல்லம்பட்டி உட்பட்ட பகுதிகளில் மின்சாரம் சீராக வழங்கும் பொருட்டு திருச்செங்கோடு உஞ்சணையில் ஒரு புதிய 230/110 கே.வி. துணை மின் நிலையம் 11-3-94 அன்று அமைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் 110 கே.வி. துணை மின் நிலையம் உஞ்சணையில் 230/110 கே.வி. மின் நிலையத்தோடு 12-3-94 அன்று இணைக்கப்பட்டது. அதன் பின்பு நாமக்கல் மற்றும் செல்லம்பட்டி பகுதிகளில் மின் வினியோகம் கணிசமாக சீர்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே 7 கோடியே 31 லட்ச ரூபாய் செலவில் இந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டதற்குப் பின்னால் இப்போது இந்தப் பகுதிகளில் மின் வினியோகம் சீரடைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கொடுக்கப்படும்போதுதான் இந்தத் தடை இருந்தது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுடைய சிறந்த நிர்வாகத் திறமையின் காரணத்தாலும், அவருடைய அறிவாற்றல்

காரணத்தாலும் கடந்த மாதம் இந்த உஞ்சணையில் துவக்கப்பட்ட பிறகு இந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368, திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

368-

திருவட்டார் பாலத்தில் கைப்பிடிச்சுவர் கட்டுதல்

***19307-** திரு. இரா. அப்பு நடேசன் :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவட்டாரில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இரு ஓரங்களிலும் கைப்பிடிச்சுவர் கட்டாமல் இருப்பதால் பல வாகன விபத்துக்கள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கைப்பிடிச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி இடத்தில் கைப்பிடிச்சுவருக்குப் பதிலாக ஒரு "போக்குவரத்துத் திட்டு" அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதில் கைப்பிடிச்சுவர் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், நன்றி. ஆனால் அந்தப் பாலம் கட்டி 4 வருடங்கள் ஆகின்றன. வருடந்தோறும் 4,5 ஆக்சிடென்ட்டுகள் அங்கே நடந்து எத்தனையோ பேர்கள் அங்கே இறந்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இந்த வருடமே அதைக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.